<u>நாமக்கல் - டிரினிடி மகளிர் கல்லூரியில் ஜிஎஸ்டி குறித்த பயிலரங்கு</u>

நாமக்கல் - டிரினிடி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் வணிகவியல் துறையின் சார்பில் "சரக்கு மற்றும் சேவை வரி – ஒரு கண்ணோட்டம்" என்ற தலைப்பிலான ஒரு நாள் பயிலரங்கு அண்மையில் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு கல்லூரி செயல் இயக்குநர் அருணா செல்வராஜ் தலைமை தாங்கினார். முதல்வர் எம். ஆர். லட்சுமிநாராயணன் முன்னிலை வகித்தார். இயக்குநர் உயர்கல்வி அரசுபரமேசுவரன் வாழ்த்துரை வழங்கினார். வணிகவியல் துறைத்தலைவர் எம். சசிகலா அனைவரையும் வரவேற்றார்.

சிறப்பு அழைப்பாளர்களாக நாமக்கல் - தென்பாண்டியன் தொழில் குழுமங்களின் கணக்குப் பதிவியல் துறையின் முதுநிலை மேலாளர் டி. செந்தில்குமார் மற்றும் நாமக்கல் - மீனா எல்பிஜி நிறுவனத்தின் கணக்குப்பதிவியல் துறையின் செயல் அலுவலர் எஸ் ரேணுகா ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஜிஎஸ்டி எனப்படும் சரக்கு மற்றும் சேவை வரி ஒரு மறைமுக வரியாகும். மத்திய அரசும், மாநில அரசுகளும் விதிக்கப்படும் பல்வேறு வரிகளுக்கு பதிலாக ஒற்றை வரியாக அறிமுகப்படுத்தியிருப்பது இதன் சிறப்பு அம்சமாகும். இந்தியாவில் ஜூலை 1, 2017 முதல் இந்த வரி அறிமுகப்படுத்தப்பட்டது. 0 சதவீதம், 5 சதவீதம், 12 சதவீதம், 18 சதவீதம் மற்றும் 28 சதவீதம் என்ற முறையில் ஜிஎஸ்டி வரிவிதிக்கப்படுகிறது. பெட்ரோலியப் பொருட்களும், மதுபான வகைகளும் இந்த ஜிஎஸ்டி பிரிவில் சேராது. ஒற்றை வரியாக செயல் படுவதால் பல நன்மைகள் மத்திய, மாநில அரசுகளுக்கு கிடைக்கிறது என்று அவர்கள் இந்நிகழ்வில் பேசினர். மேலும் ஜிஎஸ்டி உருவான வரலாறு, கவுன்சில், நிர்வாகம், மதிப்பிடும் முறைகள், இணைய வழியில் பதிவிடும் வழிகள் மற்றும் அதன் உதவி எண்கள் பற்றியும் இப்பயிலரங்கில் எடுத்துக் கூறினர்.

இந்நிகழ்வில் தென்பாண்டியன் தொழில்குழுமத்தின் முதுநிலை கணக்காளர் எம். சதீஷ், வணிகவியல் துறைப் பேராசிரியைகள் ஜி. நித்யா, எஸ் தேவி, எம். ராஜபத்மாவதி, ஆர். சுபா, எம். ரம்யா, கே. அமுதா, ஜி. கோகிலா, நிர்வாக அலுவலர் என்.எஸ். செந்தில்குமார் உட்பட 250-க்கும் மேற்பட்ட வணிகவியல் துறை மாணவியர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியினை இரண்டாம் ஆண்டு எம்.காம். மாணவியர் எல். கீர்த்தி மற்றும் ஜே.கே. வர்ஷினி ஆகியோர் தொகுத்து வழங்கினர்.

30/1/2023

Principal,
Trinity College for Women (Arts & Science),
Namakkal - 637 002.